[15th March 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அரசாங்கக் கல்வித்துறை ஸ்தாபனங்களைச் சேர்ந்த அதிகாரிகள், தலைமை ஆசிரியர்கள், உத்தியோகப் பற்றற்றவர்கள், இவர்களையெல்லாம் சேர்த்துக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: சார், இந்த ஆசிரியர்களை தேர்ந்தெடுக்கும் பணியில், அதிகாரிகள் மட்டும் இருந்தாலே போதுமானதே. கலெக்டர், அல்லது டெபுடி கலெக்டர் இவர்களிடம் இருந்தாலே போதுமானது. இதற்காகத் தனிப்பட்டவர்கள் போடப்படும்போது காங்கிரஸ்காரர்களை மட்டும் போடுவானேன், மற்றவர்களைப் போடாததற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்படி உத்தியோகப் பற்றற்றவர்கள் இல்லாமல் அதிகாரிகளேதான் இருந்தனர். ஆனால், உத்தியோகப் பற்றற்றவர்கள் இருக்கவேண்டும் என்கிற கோரிக்கை வலியுறுத்தப்பட்டு வந்தது. அதன் காரணமாக, அப்படிப்பட்டவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சேர்க்கப்படவேண்டும், அந்தக் கட்சிக்காரரைச் சேர்க்கக் கூடாது என்று நிபந்தனை ஒன்றும் கிடையாது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: அமைச்சருடைய வாதத்திற்கு மாறாக, எங்களில் 50 பேர்கள் இருக்கும்போது, அவர்களில் ஒருவர் கூட சேர்க்கப்படவில்லையே. அதன் காரணம் என்ன என்று விளக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: யார் சேர்க்கப்படவில்லை என்பதற்குக் காரணம் கூற முடியாது.

* 299 கேள்வி—**திரு. ஆ. துரையரசன்:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-66-ம் ஆண்டில் மதுரை மாவட்டம் பெரியகுளம் தாலூகாவிலுள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு விண்ணப்பம் செய்துகொண்டவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) பெரியகுளம் தாலூகாவில் பயிற்சிப் பள்ளி எதுவும் இல்லை. எனினும், செகண்டரி அல்லது சீனியர் பேசிக் கிரேடு பயிற்சிக்காக 1,664 விண்ணப்பங்களும், தொடக்க அல்லது ஜூனியர் பேசிக் கிரேடு பயிற்சிக்காக 534 விண்ணப்பங்களும் இத்தாலூகாவிலிருந்து வரப்பெற்றன.

(இ) செகண்டரி அல்லது சீனியர் பேசிக் கிரேடு பயிற்சிக்காக 124 நபர்களும், தொடக்க அல்லது ஜூனியர் பேசிக் கிரேடு பயிற்சிக்காக 35 நபர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* 300 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Girls Teachers' Training School in Palani was temporarily closed due to spread of a severe

15th March 1966]

type of fever among the students resulting in the death of two of them; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) On account of the prevalence of a severe type of fever and on the advice of the Municipal and Health Officers, the school had to be closed from 1st September 1965 to 12th September 1965 instead of from 11th September 1965 to 20th September 1965 for mid-term holidays. One local student died of diarrhoea on 30th August 1965 in her residence and the other passed away on 4th September 1965 during the holidays.

திரு. வை. சங்கரன்: இந்த இறந்துபோன இரண்டு பேர்களுடைய கேஸ்களிலும் விரைவாக டயக்னேசிஸ் செய்து காலா காலத்தில் மருந்து கொடுக்கப் படவில்லை என்று கூறப்படுவது வாஸ்தவமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அது சரியல்ல.

முதியோர் கல்வி

*** 301 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து:**
திரு. வை. சங்கரன்: } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) முதியோர் கல்விக்காக புதிய திட்டம் ஏதேனும் வகுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில் அதன் விவரம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) & (இ) சபை முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வை சங்கரன்: கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கையில், அவர்களுக்கு ஒரு சீலிங், மாக்சிமம் வயது, 45 என்று, அதற்கு மேல் போகக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? அடல்ட் எஜுகேஷன் என்று வரும்போது, கீழே வரையறை வைப்பது சரியாக இருக்கலாம். ஆனால், மேல் வரையறை வைப்பது சரியல்ல. அதற்குக் காரணம் என்ன என்று கூறமுடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: முதியோர்களுக்குக் கல்வி புகட்டுவது என்பதுதான். ஓரளவாகிலும் எல்லோருக்கும் கல்வி பயில வசதி கொடுக்க வேண்டும் என்பதுதான் நோக்கம், அதுதான் முக்கியம். பலன் பரவலாகக் கிடைக்க வேண்டும் என்றுதான் 45 வயது என்று வைக்கப்பட்டிருக்கிறது.

---

a 340-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.